**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Proceeture )**
**In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.**

**CC.No. 556/2018**

**Deposition of LW1 Examined as PW1**

| | |
|---|---|
| **Name** | **:Shanthi** |
| **Husband / Father Name** | **: Vadivelan** |
| **village** | **:** |
| **Taluk** | **:** |
| **Post** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **: 36 /21** |

**Solomnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2021**

**முதல் விசாரணை**

நான் முட்டகுடியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 குழந்தைகள் உள்ளார்கள். 14.12.2017 ஆம் தேதி 3 மணியளவில் எங்களுடைய இரண்டு சக்க வாகனத்தில் TH 51 K 1873 என்ற வாகனத்தில் என் கணவருடன் நானும் எனது குழந்தைகளும் எனது அம்மாவிட்டிற்கு ஒரு துக்க சம்பந்தமாக சென்றுவிட்டு கொஞ்ச துாரம் வந்துவிட்டோம் பின்னர் எங்களுடை செல்லை என் அம்மா வீட்டிலேயே வைத்துவிட்டபடியால் என் கணவர் என்னையும் என் குழந்தைகளையும் திருச்சிற்றம்பலம் அருகில் குனுக்கு மணி பாலம் அருகில் எங்களை இறக்கிவிட்டு பந்தநல்லுாரில் இருந்து வைத்தீஸ்வரன்கோயில் செல்லும் சாலை நோக்கி சென்றார். அப்போது எதிரில் இருந்து மகேந்திரா லோடுவேன் எதிரே வேகமாக வந்து என் கணவர் மீது மோதியது. மோதி விபத்தின் காரணமாக எனது கணவருக்கு பின் மண்டை, இரண்டு கைகளும் நொருங்கிய நிலையிலும், காலும் நொருங்கிய நிலையிலும் வயிறும் அடிப்பட்டு காணப்பட்டது. அந்த மகேந்திரா லோடுவேனை ஓட்டி வந்த எதிரியை நான் பார்த்தேன் அவரது பெயர் சுந்தர்ராஜன் என்பதை பின்னர் கேட்டுத்தெரிந்துகொண்டேன். என் கணவர் அடிப்பட்டது கொஞ்ச துாரத்தில் தான் விபத்து ஏற்பட்டது. எனது கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவானது என்னால் சொல்லப்பட்டு போலிசாரால எழுதப்பட்டது அதில் நான் கையெழுத்து செய்தேன்.. அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலிஸ் விசாரணையில் சம்பவத்தன்று என் கணவர் மற்றும் குழந்தைகளுடன் சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் செல்லியுள்ளேன். திருச்சிற்றம்பலம் என்ற ஊரில் இருந்து சுமார் 3 மணிக்கு கிளம்பினோம். நாங்கள் கிளம்பிய வீடானது திருச்சிற்றம்பலம் ஊரில் முதலிலேயே உள்ளது. நாங்கள் கிளம்பிய இடத்தில் இருந்து மெயின்ரோடானது 1 கி.மீ இருக்கும். என்றால் சரிதான். மெயின்ரோட்டில் இருந்து குமுக்கு மணி ஆறு 1 கி.மீ துாரம் இருக்கும் என்றால் சரிதான். என்னை எனது கணவர் குமுக்குமணி ஆற்றில் இருந்து சுமார் 50 மீட்டர் அளவில் என்னை

இறக்கிவிட்டு சென்றார் என்றால் 20மீட்டர் இருக்கும். திருச்சிற்றம்பலம் மெயின்ரோட்டில் இருந்து பந்தநல்லூர் வைத்தீஸ்வரன் கோயில் சாலையில் வந்து சேர்ந்தில் இருந்து வளைவு அது பின்பு சுடுகாடு நான் நின்றதாக சொல்லப்படும் இடம் அதைதான்டி இரண்டு வளைவுகள் சொக்போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். நான் நின்றது இரண்டாவது வளைவுதான்டிதான் நின்றேன். மேற்கு திசையில் இருந்து இரண்டாவது வளைவுக்கு அடுத்துதான் சம்பவம் நடந்தது . சம்பவம் வளைவுக்கு முன்பு நடந்தது. எனது கணவர்ரோட்டின் வலது பக்கம் ரோட்டின் ஓரமாக கிடந்தார். வண்டியும் ரோட்டின் வலது பக்கம் இருந்தது. அந்த வலது பக்கம் என்பது பந்தநல்லுரில் இருந்து வரும் ரோட்டின் வலது பக்கமாகும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்ரோடு கிழக்கு மேற்கு சாலை என்றால் சரிதான். சாலையில் எந்த திசையில் செல்ல வேண்டும் என்று என் கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். என் கணவர் தான் குடிபோதையில் ரோட்டின் தவறான திசையில் வந்து விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் வாகனத்தில் எதிரி வந்த வாகனத்தின் எந்த பாகத்தில் மோதியது என்று சரியாக தெரியாது. என் கணவர் அடிப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் அவருக்கு ஏற்பட்ட காயததினால் வந்த இரத்தம் எந்த ரோட்டில் எந்த இடத்தில் இருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது வேறு யாரும் அங்கும் இல்லை. நான் நின்ற இடத்தில் ஒரு வீடு இருந்தது. நான் நின்ற இடத்தில் இருந்த வீடானது எஸ் வளைவுக்கு மேற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். புகாரினை என்னிடம் படித்துசொன்னார்கள் அதில் நான் கையெழுத்து போட்டேன். புகார்கொடுத்த பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிக்கும் விபத்து சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் என் கணவர்தான் தவறான திசையில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கு முழுக்காரணமும் என் கணவர் என்றால் சரியல்ல.

கொற்கையில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என்னுடைய வயலில் நான் நின்ற கொண்டிருந்தபோது தண்ணீர் வயலுக்கு விடுவது சம்பந்தமாக ஊர்காரர்கள் அந்த இடத்தில் நின்ற கொண்டிருந்தார்கள் ஒரே கூட்டமாக இருந்தததது. அந்த கூட்டத்தில் என்னை யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை. எதிரிகளுடன் முன்விரேதம் இருந்துவந்ததால் எதிரிகள் என்னைதாக்கியிருப்பார்கள் என்று புகார் அளித்துவிட்டேன். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது. அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய கேட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் குவிமுச பிரிவு 320(2)படியான சமாதான மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேன். அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ–2 ஆகும். கடந்த 31.10.2017 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு நான் வயலில் நின்றுகொண்டிருந்தபோது 1வது எதிரி குமார் தன் கையில் மண்வெட்டியை வைத்துகொண்டு என்னை கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும், மண்வெட்டியால் தன்னை இடது முன் கை, வலது தொடைபக்கத்தில் வெட்டியும் என்னை கையால் இடது மார்பு பக்கம் குத்தியும் சொற்ப காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அவருடன் சேர்ந்து 2வது எதிரி கல்யாணசுந்தரமும் என்னை எங்கும் செல்லவிடாமல் கட்டிபிடித்துகொண்டார் என்றும் போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதாலும் எதிரியோடு சமாதானம ஆகிவிட்டபடியாலும் எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.